**மொரட்டுவ பல்கலைக்கழகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுகளின் ஊடாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்படியான நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமத்தின் (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிரு-க்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படும் தரப்புகளை அறிவுறுத்தப்பட்டது.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் ஊடாக இணைப்பு செய்யப்படும் BIT பாடநெறிக்காக தனியார் நிறுவனத்துடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டிய ஆகக்குறைந்த மாணவர் எண்ணிக்கையை இணைத்துக் கொள்ளாத காரணத்தினால் இரு தனியார் நிறுவனங்களிலிருந்து 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக பல்கலைக்கழகத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 8,255,000 கூட்டுத்தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அந்த நிறுவனங்களில் தற்போது மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் அதனை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்தவாறு உள்ளது. | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 02 முதல் 07 வரையான காலம் கடந்திருந்த ரூபா 2,398,749 கூட்டுத்தொகையான கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து அவற்றை தீர்ப்பனவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 760 (அ) | பராமரிப்பு பிரிவில் ரூபா 793,088 கிரயமான பொருட்கள் காணாமல் போனமை தொடர்பில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது இறுதி இருப்பிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இந்த ரூபா 793,088 பெறுமதியை பெற்றுக் கொள்ளும் போது குறிப்பிடப்பட்டுள்ள அலகு விலைகள் நிலவும் விலைகளுடன் இணங்காமையால் இந்த ஏற்றுக்கொள்ள முடியாத அலகு விலைகளின் பெறுமதி மொத்த பெறுமதிக்கு பொருண்மையாக தாக்கமளிக்கும் என்பதனை அறிய முடியும். | கிரயத்தினை சரியாக இனங்கண்டு நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 571(2) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வைப்புச் செய்த திகதியிலிருந்து 02 வருடங்களை விஞ்சிய ரூபா 10,249,876 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய தரப்பினர்களுக்கு தெரிவித்து எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் நானாவித வைப்புக் கணக்கில் பதிவு செய்துள்ள இனங்காணப்படாத வைப்புக்களை இனங்கண்ட பின்னர் உரிய கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கும் வாசிகசாலை மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வைப்பு 05 வருட காலத்தில் விடுவிக்கப்படவில்லை எனில் அவற்றை இந்த கணக்குகளுக்கு மாற்றுவதற்கு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | நிதிப் பிரமாணம் 1646 | மீளாய்வாண்டிற் குரியதாக பல்கலைக் கழகத்தினால் பயன்படுத்தப்படும் 24 வாகனங்களின் மாதாந்த பொழிப்புக்களின் மூலப்பிரதிகளும் நாளாந்த ஓட்டக் குறிப்புக்களின் மூலப்பிரதிகளும் அதற்கடுத்த 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அனைத்து சாரதிகளும் தமக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டக் குறிப்புக்களை ஒரு மாதம் நிறைவடைந்து அதற்கடுத்த மாதத்தின் முதல் வாரத்தினுள் விடயத்திற்கு பொறுப்பான எழுதுவினைஞருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்ள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையில் XX அத்தியாயத்தில் 3.1 பிரிவு | கல்விசார் பணியாற்றொகுதியினரின் வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்தப்படாது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 1,874,019,085 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | மொத்த பல்கலைக்கழக முறைமையினுள் இந்த முறைமை பயன்படுத்தப்படுவதால், மொரட்டுவ பல்கலைக்கழகத்திலும் இந்த முறைமை செயற்படுத்தப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். | உரிய சட்டங்கள், விதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 13,245,551,250 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. | பல்கலைக்கழகம் கணினிமயமாக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேட்டை பராமரிக்கிறது. அதன் அச்சிடப்பட்ட நகலைப் பெறுவதற்கு அதிக செலவாகும் என்பதால், நிதிப் பிரிவிற்கு சொந்தமான கணினி மயமாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டை அணுகி, அதற்கான சோதனைகளை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | தொடர்புடைய சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும் என்பதுடன், கணக்காய்வுக்கு கணினிமயமாக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேட்டில் அணுகல் வழங்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) மற்றும் 4.2.1(இ) ஆம் பந்தி | பல்கலைக் கழகத்தினால் மீளாய்வாண்டு உள்ளடங்கலாக பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராத துடன் 2022 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டமும் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தை தயாரித்துள்ளதுடன் அது அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 165,349,451 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 388,530,483 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 553,879,934 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசின் மீண்டெழும் மானியங்களின் பெறுவனவு ரூபா 310,000,000 இனால் அதிகரித்தமை, அரசின் மூலதன மானியங்கள் (செலவிடப்பட்ட) ரூபா 66,516,203 இனால் அதிகரித்தமையும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சேவைகளுக்கான செலவினம் ரூபா 36,529,828 இனால் குறைவடைந்தமை மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 58,423,981 இனால் குறைவடைந்தமை பிரதானமான காரணங்களாக அமைந்திருந்தன.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1992 ஆம் ஆண்டு முதல் மொறட்டுவை பல்கலைக்கழக வாளகத்தினுள் எந்தவித உடன்படிக்கையுமின்றி அரச வங்கியின் கிளையொன்று மற்றும் அரச வங்கியின் தன்னியக்க டெயிலர் இயந்திரமொன்றும் (ATM) பொருத்தப்பட்டிருந்ததுடன் அவற்றிலிருந்து எந்தவித வாடகையும் 2022 மே | இது தொடர்பில் குத்தகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. | முறையான உடன்படிக்கை களை கைச்சாத்திட வேண்டியதுடன் பல்கலைக் கழகத்திற்கு வருமானத்தை ஈட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாதம் வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கல்விசார் விடுமுறைகளை பெற்று வெளிநாடு சென்ற கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியின் 33 பேருக்கு உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகள் மீறப்பட்டமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 55,348,324 கூட்டுத்தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் அவற்றிலிருந்து ரூபா 27,874,725 கூட்டுத்தொகையான 21 பேரின் பிணைமுறிகளை மீறிய 1981 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவித பணத்தையும் அறவிடுவதற்கு தவறவிடப்பட்டிருந்தது. | 25 வருடங்களை விஞ்சியிருந்த 09 பேராசிரியர்களில் ஒருவருக்குரிய ரூபா 34,597.77 ஆன தொகை அவருக்கு உரிய பல்கலைக்கழக நலன்புரி நிதியத்திலிருந்து தீர்ப்பனவு செய்வதற்கும் ஏனைய 8 பேராசிரியர்களின் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டியுள்ள ரூபா 703,311.12 ஆன தொகையை நிர்வாக சபை தீர்மானங்களின் பிரகாரம் நிதிப்பிரமாணம் 109 (01) இன் பிரகாரம் கருத்தில் கொள்ளாமல் விடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. ஏனைய 07 பேராசிரியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மூலம் அறவிடுவதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. | குறித்த பணத்தை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மூலம் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவாரி தரப்பினருக்கு பொறியியல் மதியுரை சேவைகளை வழங்கி மீளாய்வாண்டினுள் ரூபா 292,585,898 ஆன வருமானம் ஈட்டப்பட்டுள்ள போது பல்கலைக்கழக வளாகத்தினுள் மேற்கொள்ளப்படும் நிர்மாண செயற்திட்டங்களுக்காக வெளிவாரி தரப்பினரின் மதியுரை சேவைகளை பெற்றுக் கொண்டமைக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 7,359,395 செலவிடப்பட்டிருந்தது. | வெளிவாரி தரப்பினருக்கு மதியுரை சேவைகளை வழங்கும் போது குறித்த பதவியணி பல்கலைக்கழக கடமைகளுக்கு மேலதிகமாக கடமை வேலைகளுக்கு புறம்பாக இந்த சேவையினை வழங்குகின்றது.<br><br>பல்கலைக்கழகத்தின் விரிவுரை பணிகளுக்காக உள்ளக பதவியணிக்கு கொடுப்பனவு மேற்கொள்வதற்கு அரசின் பணத்தை ஈடுபடுத்த முடியாதிருந்தமையால் பதவியணிக்கு சாட்டப்பட்டுள்ள | பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்களின் அறிவினை பல்கலைக் கழகத்தின் பணிகளுக்காக பயன்படுத்தி மிகவும் பயனுள்ள தீர்மானம் எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கடமைகளுக்கு புறம்பாக அவர்கள் பல்கலைக்கழகத்தின் மதியுரை சேவைகளில் ஈடுபடுத்த முடியாது. | |
| (ஈ) | சுமார் 03 வருட காலமாக செயலற்று காணப்படும் பாடநெறிகள் மற்றும் செயற்திட்டக் கணக்கு குறித்த இணைப்பாளர்களின் பரிந்துரைகளை பெற்றுக் கொண்டு தீர்ப்பனவு செய்தல் பல்கலைக்கழகத்தின் கொள்கையான போதிலும் 04 வருட காலமாக ரூபா 3,270,874 கூட்டுத்தொகையான செயற்பாடற்ற 04 கணக்குகளை தீர்ப்பனவு செய்யும் பணிகளை மேற்கொள்ளாது பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | இந்த கணக்குகளில் 04 கணக்குகளில் ஒரு கணக்கு தற்போது தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய 03 கணக்குகளை துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்பாடற்ற கணக்குகளை தீர்ப்பனவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மற்றும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட வேண்டிய திகதி கடந்திருந்த 14 ஆராய்ச்சிகளுக்காக ரூபா 17,135,136 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த ஆராய்ச்சிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 09 ஆராய்ச்சிகளுக்கான காலஎல்லை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. 12 ஆராய்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 17,135,136 ஆன தொகை செலவிடப்பட்டிருந்த 14 ஆராய்ச்சிகள் தொடர்ந்தும் நிறைவு செய்யப்படவில்லை. | உரிய காலப் பகுதியினுள் ஆராய்ச்சிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான | பல்கலைக்கழகத்திற்கு தேவையான டோனர் மற்றும் காட்றிச்களை | தேவைக்கமைய இருப்பினை கொள்வனவு |

| | | |
|---|---|---|
| காலப்பகுதியினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,775,690 கூட்டுத்தொகையான டோனர் மற்றும் காட்றிச் (Toner and Cartridge) இருப்பொன்று 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டது. | கொள்வனவு செய்யும் போது இவ்வாறு மிகையொன்று ஏற்படாத வகையில் கொள்வனவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செய்ய நடவடிக்கை மேற்கொண்டு விரயத்தினை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 9,624,111 கூட்டுத்தொகையான 22 புலமைப்பரிசில் நிதியங்கள் 03 வருடம் முதல் 11 வருடம் வரையான காலமாக எவ்வித புலமைப் பரிசில்களையும் வழங்குவதற்கு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. மேலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 3,356,683 கூட்டுத்தொகையான செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட 22 புலமைப் பரிசில் நிதியங்களை பயன்படுத்தி ''விருதுகள் மற்றும் புலமைப்பரிசில்'' ஆக புதிய கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் புலமைப்பரிசில் வழங்குவதற்கான அளவீடுகள் தயாரிக்கப்பட்டிராத போது மேலும் ரூபா 10,000,000 தொகை மீளாய்வாண்டினுள் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி நிதியத்திலிருந்து அந்தக் | இந்த செயலிழந்த நிலையில் காணப்படும் புலமைப்பரிசில் நிதியம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து அதற்கான நலன்புரி பிரிவிற்கு மற்றும் பரீட்சைகள் பிரிவிற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே தற்போது விருதுகள் மற்றும் புலமைப்பரிசில் நிதியத்திலிருந்து உரிய தேவையுடைய புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு உரிய அளவீடுகள் தயாரிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது இதன் பிணைகள் இடம்பெற்றவாறு உள்ளது. | நிதியங்களை ஏற்புடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பயன்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | | |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 9,097,939 கூட்டுத்தொகையான பல்கலைக்கழக பாடநெறிகள் மற்றும் திணைக்களத்தின் 29 நிதியங்கள் 03 முதல் 04 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் அந்த நிதியத்தை தாபிப்பதற்கான நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இந்த திணைக்களத்தின் அபிவிருத்தி நிதியங்களுக்காக பணம் வழங்கப்படுவது குறித்த திணைக்களத்தினால் சுயமாக ஈட்டும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பாடநெறிகள் / ஆராய்ச்சிகள் மற்றும் மதியுரை சேவைகளின் ஊடாக ஆகும். இந்த நிதியம் திட்டவட்டமான காலத்தினுள் செலவிடப்பட வேண்டியதுடன் வெளிவாரி நிறுவனங்களினால் வழங்கப்படும் நிதியம் அல்ல என்பதால் அவை பல வருடங்களாக செலவிடப்படாது ஒதுக்கமாக பேணிச் செல்வதில் பிரச்சினையொன்று இல்லை என்பதனை காண முடியும்.<br><br>இந்த பாடநெறிகளை மேம்படுத்துவதற்காகவும் எதிர்கால தேவைகளுக்காக ஒதுக்கமொன்றாக குறித்த பாடநெறிகளின் ஊடாக ஈட்டப்படும் வருமானத்தின் ஒரு பகுதியை இவ்வாறு பாடநெறி அபிவிருத்தி நிதியமாக பேணிச் செல்லப்படுகின்றது. | நிதியங்களை ஏற்புடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பயன்படுத்தல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணி முறையே 1066 மற்றும் 888 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான | குறித்த பதவிகளுக்கு தகைமை வாய்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திராமையால் குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்ததுடன் | தேவைகள் உள்ள பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணி முறையே 636 மற்றும் 662 ஆனமையால் வெற்றிடங்கள் முறையே 430 மற்றும் 226 ஆகும். கல்விசார் பதவியணியில் உள்ள பேராசிரியர்களில் 228 வெற்றிடங்களுக்காக வெளிவாரி பேராசிரியர்களை இணைத்துக் கொண்டு மீளாய்வாண்டில் ரூபா 30,996,109 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | அதன்போது கல்விசார் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு வெளிவாரி பேராசிரியர்களின் சேவையை பெற்றுக் கொள்ள நேர்ந்தது. | வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்ட பதிவேட்டின் பிரதியொன்று 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் தற்போது அரசின் கணக்காய்வு பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டினை தயாரித்துள்ளதுடன் அது கணக்காய்விற்கு சமர்ப்பிக்க இயலும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |